**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 72-2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW1 | | Examined as : PW 1 | |
| Name | : அன்பு கண்ணன் | Defence | : |
| Father/Husband Name | : அன்பழகன் | Court | : |
| Village | : ஆறுபாதி | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 41/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 06.01.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை:-</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் 01.00 மணியளவில் எனது வீட்டிற்கு எதிரே உள்ள வாட்டர் டேங்க் அருகில் சுமார் 10-20 நபர்கள் கூட்டமாக அவர்களுக்குள் தகராறு செய்துகொண்டிருந்தார்கள். அந்த தகராறை வேடிக்கை பார்க்க சென்ற போது அந்த கூட்டத்தில் இருந்த யாரோ என்னை தாக்கினார்கள். யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை. அந்த கூட்டத்தில் எதிரிகள் இருந்ததாலும் அவர்களுக்கும் எங்களுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்ததாலும் அவர்கள் தான் என்னை தாக்கியிருக்க கூடும் என நினைத்து அவர்கள் மீது மிகை படுத்தி புகார் மனு கொடுத்துவிட்டேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள் ஆவார்கள். அவர்களுடன் நான் சமாதானம் ஆகி சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 16.05.2024ம் தேதி மதியம் 01.00

மணியளவில் ஆஜர் எதிரிகள் எனது வீட்டிற்கு எதிரே உள்ள வாட்டர் டேங்க் அருகில் குடித்து விட்டு தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், கட்டையால் முகத்திலும் கையிலும் என்னை மாறி மாறி அடித்தார்கள் என்றும், அதில் எனக்கு இடது கண் புருவத்தில் காயம் ஏற்பட்டது என்றும், என்னை கீழே தள்ளி கையால் நெஞ்சில் குத்தினார்கள் என்றும் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் புகார் மனுவிலும் போலிசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் நான் சமாதானம் ஆகிவிட்டபடியால் அவர்களை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**

**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**<u>C.C.No. 132-2025</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| Deposition of LW2 | | | Examined as : PW 2 | |
| Name | : | சோனமுத்து | Defence | : |
| Father/Husband Name | : | கந்தன் | Court | : |
| Village | : | மங்கைநல்லூர் | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 50/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 06.01.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை:–</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–**

அசா1 எனது அக்கா மகன் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் அசா1ன் ஊரை சேர்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த 14.06.2022 ம் தேதி எதிரிகள் அசா1ஐ தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், 1வது எதிரி இரும்பு கம்பியால் அசா1ன் தலையில் தாக்கினார் என்றும், 3வதுஎதிரி மூங்கில் கட்டையால் அசா1ன் இடது தோள்பட்டையில் அடித்தார் என்றும், 2வது எதிரி இரும்பு பைப்பால் அசா1 ஐ தாக்கினார் என்றும், எதிரிகள் மூவரும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என அசா1ற்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் அதை நான் நேரில் பார்த்ததாகவும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு பழக்கமானவர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 132-2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW4 | | Examined as : PW 3 | |
| Name | : ராஜசேகர் | Defence | : |
| Father/Husband Name | : ஜெயபால் | Court | : |
| Village | : கழனிவாசல் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 39/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 06.01.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை:–

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ரைஸ் மில்லில் வேலை செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் என்னுடையது எதுவும் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

அசா1 மற்றும் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த 18.06.2022 ம் தேதி மதியம் 12.00 மணியளவில் நானும் சீனிவாசன் என்பவரும் எங்கள் ஊர் மாரியம்மன் கோவில் அருகில்பேசிக்கொண்டிருந்தபோது பெரம்பூர் போலிசார் அங்கு வந்து 14.06.2022 அன்று அசா1ற்கும் எதிரிகளுக்கும் இடையே நடந்த தகராறு சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும் சீனிவாசன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**